Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.639/2019

**Depositions of PW- 5**

| Name | திரு.கருத்தப்பாண்டி | Occupation | சார்பு ஆய்வாளர் |
|---|---|---|---|
| Father's name | சுந்தரராஜன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of July 2026.

23.07.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**சாட்சி வீடியோ காணொளி மூலம் ஆஜரானார்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை அண்ணாசாலை D2 காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் 25.05.2019 அன்று சார்பு ஆய்வாளராக பணியிலிருந்தபோது நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் கனகராஜ் என்பவர் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்திருந்த குற்ற எண்.269/2019 பிரிவுகள்.457, 380 இதச வழக்கை எனது மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 11.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் மாடமுத்து, சித்திரைக்கனி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **வரைபடம் அசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் பால்ச்சாமி, சாந்தி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். விசாரணையில் சம்பவம் உண்மையென தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில் அன்றைய தினமே 14.15 மணியளவில் திருவில்லிபுத்தூர் டு திருவண்ணாமலை ரோட்டிலுள்ள வெள்ளமடம் கருப்பசாமி கோவிலருகே வரும்போது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சந்தேகப்படும் வகையில்

வந்த எதிரி முகமதுரியாஷ் ஐ சந்தேகத்தின்பேரில் விசாரணை செய்து முன்னுக்குபின் முரணாக சொன்னதால் காரணம் கூறி கைது செய்தபோது எதிரி தானாக முன்வந்து எந்தவித அச்சுறுத்தலும் துன்புறுத்தலும் இல்லாமல் கொடுத்தத ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் தாமோதரகண்ணன், சுரேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் 16.30 மணியளவில் திருவில்லிபுத்தூர் துடியாண்டியம்மன் கோவில் தெருவிலுள்ள எதிரியின் வீட்டின் முன்பு வைத்து எதிரி வீட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூ.15,000/- ஐ அத்தாட்சி தயார் செய்து அத்தாட்சியின் பேரில் கைப்பற்றி சாட்சிகளிடம் வாக்குமூலம் பதிவு செய்தேன். **அத்தாட்சி அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. **புகைப்படத்திலுள்ள பணம் ரூ.15,000/- சாபொ.I ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் எதிரி மற்றும் பணத்துடன் நிலையம் வந்து எதிரியை திரேக பரிசோதனை செய்து புகார்தாரரிடம் மறுவாக்குமூலம் பதிவு செய்து எதிரியை பாராவசம் ஒப்படைத்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **படிவம் 91 அசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் கனகராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை பிரிவுகள்.457, 380 இதசவிலிருந்து பிரிவுகள்.457, 380 உ/இ 34 இதச ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் 12.06.2019 அன்று இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரிமீது பிரிவுகள்.457, 380 உ/இ 34 இதச வின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

மேற்படி சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் புகார்மனு பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர், வரைபடம், அத்தாட்சி போன்ற ஆவணங்கள் இவ்வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சாட்சிகளை சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் குற்ற இறுதியறிக்கையானது தாக்கல்

செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.